# குடும்பத்தின் பொருளாதார தேவையை நிவர்த்தி செய்வதில் பெண் சிறுகைத்தொழில் முயற்சியாளர்களின் வகிபாகம்

**MS. Ismiya Begum[1],I. F,Sana[2]**

[1]Lecturer (prob)., Department of Islamic Studies, Faculty of Isamic Studies and Arabic language, SEUSL.
[2]Graduate, Maruthamunai.

***ismiyams@seu.ac.lk[1] , iskyfarook@gmail.com[2]***

**ஆய்வுச் சுருக்கம்**

*ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் கைத்தொழிற்துறை முக்கிய பங்காற்றி வருகின்றது. இலங்கையிலும் இத்துறை வளர்ச்சியில் பால் வேறுபாடின்றி அனைவரும் பங்கேற்றுள்ளனர். ஒப்பீட்டளவில் ஆண்களின் தொகையை விட பெண்களின் கைத்தொழிற் பங்கேற்பு வீதம் அதிகமாகும். அதிலும் ஒப்பீட்டளவில் முஸ்லிமல்லாத பெண்களின் பங்கேற்பு வீதத்தைவிட விட முஸ்லிம் பெண்களின் பங்கேற்பு மிகக் குறைவாகும். இருப்பினும் ஆய்வுப் பிரதேசமான மருதமுனைப் பிரதேசத்தில் கைத்தொழிற்துறை மூலம் வருமானம் ஈட்டும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. குறிப்பாக சிறுகைத்தொழில் துறையில் அவர்களின் பங்கேற்பு முக்கியமானதாக இனங்காணப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு ''குடும்பத்தின் பொருளாதார தேவையை நிவர்த்தி செய்வதில் பெண் சிறுகைத்தொழில் முயற்சியாளர்களின் வகிபாகம்'' எனும் தலைப்பில் இவ்வாய்வு இடம்பெறவுள்ளது. பொதுவாக இன்று பெண்களின் தொழிற்துறை பங்கேற்பு, அவர்களின் பல்துறைசார் பொருளாதார செயற்பாடுகள் குறித்து பலராலும் பேசப்பட்ட போதும் சிறுகைத்தொழிற்துறை ஊடாக அவர்கள் ஆற்றும் பங்களிப்பு சமூகத்தால் பெருமளவு பேசப்படுவதில்லை. இதனையடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது மருதமுனைப் பிரதேச பெண்களின் சிறுகைத்தொழிற்துறை பங்கேற்பு கைத்தொழிற் துறையூடாக குடும்பத்தின் பொருளாதார தேவையை நிவர்த்தி செய்வதில் அவர்களின் வகிபாகம், தமது குடும்ப பொறுப்பையும் தாண்டி இத்துறையில் அவர்களின் ஈடுபாட்டிற்கான காரணங்கள் போன்றவற்றை கண்டறிதலை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ளது. இவ்வாய்வானது இவ்வாய்வுக்கான தரவு சேகரிப்பதற்கு முதலாம் நிலைத் தரவு மூலங்களாக நேர்காணல் முறையும் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாக ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், இணையத்தள ஆக்கங்கள், பிரதேச அறிக்கைககள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுகள் விபரணப்பகுப்பாய்வு முறை மூலம் விபரிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் ஊடாக மருதமுனைப் பிரதேச முஸ்லிம் பெண்களின் சிறுகைத்தொழிற் துறையூடான வகிபாகம் அவர்களின் குடும்பத்தின் பொருளாதார தேவையை நிவர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பது கண்டறியப்பட்டது.*

***Key words:*** மருதமுனைப்பிரதேசம், சிறுகைத்தொழில், பொருளாதாரம், பெண் சிறுகைத் தொழில் முயற்சியாளர்கள்,

**அறிமுகம்**

ஒரு குடும்பம் சிறப்பாக இயங்க போதிய வருமானம் இன்றியமையாததாகும். குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகள் ஒரு ஆணில் சார்ந்திருக்கிறது என்ற பழங்கால நம்பிக்கையை நவீன பெண்கள் தகர்த்தெறிந்து பல்வேறுபட்ட பொருளாதாரச் செயற்பாடுகளில் பங்கேற்று நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிலும் குடும்பத்தின் பொருளியல் தேவைகளை நிவர்த்தி செய்து வருவதிலும ் பெரும் பங்காற்றி வருகின்றனர். ‘‘பொருளாதாரத் தேவை’’ என்பது பொருளியலியளுடன் தொடர்புபட்ட ஓர் அம்சமாகும்.(முஹம்மது கான்,2008)

குடும்பத்தின் பொருளாதார தேவையை நிவர்த்தி செய்யும் செயற்பாடு ஆண்களுக்கு மட்டுமேயுரிய கடமையாகவும் பொறுப்பாகவும் இருந்த நிலை மாறி இன்று பெண்களுக்கும் உரிய கடமை என்று கூறுமளவு பொருளாதார ரீதியாக பல்வேறு துறைகளில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் பல்வேறு வேலைத்திட்டங்களில் பங்கேற்று வருகின்றனர்.பொருளீட்டல் பெண்ணுக்கு கட்டாய கடமையல்லாத போதும் நவீன தொழிநுட்ப வளர்ச்சி, விலைவாசி அதிகரிப்பு, வறுமை, வேலையின்மை,அதிகரித்த வாழ்க்கைச் செலவு,சுயதேவைப் பூர்த்தி, பராமரிப்போர் அற்ற நிலை, பொழுது போக்கு,சமூக நிறுவனங்களின் தூண்டுதல்,சேமிப்புத் திட்டம் என பல காரணங்களால் ஆண்களின் வருமானம் மாத்திரம் குடும்பத்தின் பொருளாதாரம் சார்ந்த தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு போதியதாக இல்லை என்று இன்று உணரப்பட்டுள்ளது.பெண்ணின் செயற்களமான குடும்பத்தின் பொறுப்புக்களுக்கு மத்தியில் ஒரு பெண் மேலதிகமாக பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவது மேலதிக சுமையாக இருக்கின்ற போதும் ஆணின் துணையுடனும் துணையின்றியும் ஒரு குடும்பத்தின் பொருளாதாரத் தேவையை நிவர்த்தி செய்து கொள்வதில் பெண் வகிக்கும் வகிபாகம் அளப்பெரியதாகும் என்ற போதும் இவை பெருமளவு சமூகத்தால் வரவேற்கப்படுவதில்லை.

‘‘வளங்களை பயன்படுத்தி மனிதருடைய தேவையை நிறைவு செய்வதற்கு மனிதர்களின் தலையீட்டினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார முயற்சி கைத்தொழில்’’ என வரைவிலக்கணப்படுகின்றது. (தவசி,2016)

கைத்தொழில் உற்பத்திகளின் மூலதனம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு பேரளவு கைத்தொழில், இடை நிலைக் கைத்தொழில், சிறுகைத்தொழில் என பாகுபடுத்தலாம்.‘‘சிறுகைத்தொழில்’’உற்பத்திகள் என்பது எளிமையான மூலப் பொருள், மட்டுப்படுத்தப்பட்ட இயந்திரப் பாவனை, குறைந்தளவான ஊழியர் படை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்படும் பொருட்களைக் குறிக்கும். (சிறிசேன வீரசுந்தர,1997)

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க அளவில் சிறுகைத் தொழிற்துறைகள் பங்காற்றி வருகின்றன.அவற்றிலும் பெண்களின் பங்கேற்பு கணிசமான அளவில்

உள்வாங்கப்படுகின்றது. இந்த அடிப்படையில் ஆய்வுப்பிரதேச பெண்கள் அரசு தொழில் துறைகளிலும், அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பணியாற்றி வரும் அதேநேரம் விவசாயம், வியாபாரம், பண்ணை வளர்ப்பு, கைத்தொழில், சிறு கைத்தொழில் என பல துறைகளிலும் அவர்களின் பங்கேற்பு வியாபித்துள்ளது. பெரும்பாலான குடும்பங்களின் பொருளாதார ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வாக இவர்களின் இத்துறைசார் பங்கேற்புகள் துணைசெய்துள்ளன. இவற்றுள் சிறுகைத்தொழிற்துறை முக்கிய பங்காக இனங்காணப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் சிறு கைத்தொழிலில் ஈடுபடும் பெண்களின் ஈடுபாடு எவ்வாறுள்ளது,பல்வேறு குடும்பவியல் பொறுப்புக்களுக்கு மத்தியிலும் ஏன் இத்துறையில அவர்கள் ஈடுபடுகின்றனர்? போன்றன குறித்து எழுந்த கேள்விகள் இவ்வாய்வுக்கான உந்துதலாக அமைந்தது. இதனை அடிப்படையாக கொண்டு ஆய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம் பெண்கள் பங்கேற்றுள்ள சிறு கைத்தொழில்களில் நெசவு, தையல், உள்ளூர் உணவகம், பன் வேலை, மா இடித்தல், மிளகாய் இடித்தல், சிகையலங்காரம், கேக் வடிவமைத்தல், சிறு கடைகளை வைத்திருத்தல் ஆகியவற்றின் ஊடாக வருமானத்தை மேம்படுத்தி குடும்பத்தின் பொருளாதார தேவைகளை நிவர்த்தி செய்வதில் பங்களிப்பு செய்து வருகின்றார்கள்.

**ஆய்வின் நோக்கம்**

- மருதமுனைப் பிரதேச பெண்களின் சிறுகைத்தொழில் துறை பங்கேற்பு குறித்து கண்டறிதல்
- குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்வதில் அவர்களின் வகிபாகத்தினை மதிப்பிடுதல்.
- இத்துறையில் பெண்களின் ஈடுபாட்டிற்கான காரணங்களை பரிசீலித்தல்

**ஆய்வுக் கேள்வி**

1. எவ்வகையான சிறு கைத்தொழில்களில் பெண்களின் பங்கேற்பு இடம்பெற்று வருகின்றது?
2. சிறுகைத்தொழிற் துறையூடாக குடும்பத்தின் பொருளாதாரத் தேவையை நிவர்த்தி செய்வதில் அவர்களின் வகிபாகம் எவ்வாறுள்ளது?
3. குடும்ப பொறுப்புக்களைத் தாண்டி இத்துறையில் அவர்கள் பங்கேற்பதற்கான காரணங்கள் யாவை?

**ஆய்வின் முக்கியத்துவம்**

பொதுவாக பெண்களின் பொருளாதாரத்துறைப் பங்கேற்புக் குறித்து பல்வேறு ஆய்வுகள் இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் இடம் பெற்றிருக்கின்றன. இவ்வாய்வுகள் பெண்களின் உற்பத்தி நடவடிக்கைகள், கடின வேலைகளில் பெண்களின் பங்களிப்பு, பெண்கள் வீடுகளில் இடம்பெறும் தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடாமல் வெளியில் சென்று உழைப்பதற்கு ஏன் விரும்புகின்றார்கள், பெண்களின் தொழில் பங்கேற்பால் ஏற்பட்டுள்ள சமூக பொருளாதார

தாக்கங்கள், பொருளாதார பங்கேற்பால் நலிவடையும் பெண்கள், முஸ்லிம் பெண்களின் பொருளாதாரத்துறைப் பங்களிப்புக்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன. இருப்பினும் ஆய்வுப் பிரதேசமான மருதமுனைப் பிரதேசத்தைப் ரொபாறுத்தவரையில் பெண்களின் பொருளாதார பங்கேற்பை சிறுகைத்தொழிலுடன் தொடர்புபடுத்திய ஆய்வுகள் எதுவும் இதுவரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தவகையில் இவ்வாய்வானது முஸ்லிம் பெண்கள் குடும்ப வருமானத்தை மேம்படுத்துவதற்காக சிறுகைத்தொழில்துறையினூடாக எவ்வாறு பங்காற்றுகிறார்கள் அதற்கான காரணங்கள் என்ன? என்பதை பரீட்சிப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றது. பெண்கள் பொருளீட்டல் செயன்முறையில் ஈடுபடும்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்த ஆய்வு முயற்சிகளுக்கு இவ்வாய்வு உந்துதலாக அமையும்.

**இலக்கிய மீளாய்வு**

குடும்ப வருமானத்தை மேம்படுத்துவதில் முஸ்லிம் பெண்களின் (சிறுகைத்தொழில் ரீதியான) வகிபாகமும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தொடர்பாக மருதமுனைப் பிரதேசத்தில் எந்த ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் இதனோடு தொடர்புடைய சிறு ஆய்வுகளும் கட்டுரைகளும் நாடளாவிய அல்லது உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் ஆய்வாளர்களினால் வெளியிடப்படுகின்ற இத்தலைப்புடன் தொடர்புடைய ஆய்வுக்கட்டுரைகளை கற்பதன் மூலம் சிறந்த தெளிவினைப் பெறுவதற்கு இவ்வாய்வு மீள்நோக்கு பாரிய வழங்குகின்றது.

மைத்திரி கிருஷ்ணராஜ் ஜோய் டெஷ்முக்ஷ், (1993),"Gender in Economics" எனும் நூலில் பெண்கள் உற்பத்தி நடவடிக்கை பற்றியும், கடின வேலைகளில் பெண்களின் பங்களிப்புப் பற்றியும், பெண்கள் வீடுகளில் இடம்பெறும் வேலைவாய்ப்பில் பங்கேற்காமல் கூலிக்கு உழைப்பு எனும் பெயரில் வெளியில் சென்று உழைப்பதற்கு ஏன் விரும்புகின்றார்கள் எனும் விடயம் பற்றியும் ஆராய்ந்துள்ளார். இவர் இதற்கு தனது நேரடி அவதானங்கள் மூலம் ராஜஸ்தான், மேற்கு வங்காளம் போன்ற இடங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார். மேலும் இவர் பெண்களின் இயற்கையான தன்மையினை வைத்து பல்வேறு காரணங்களுக்காக பெண்கள் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றாலும் இவர்கள் உள்ளார்ந்த ரீதியிலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள் எனும் கருத்தையும் முன்வைக்கின்றார்.

மனோரி முத்தடுவேகம என்பவரால் பொருளியல் நோக்கு (2000),''வறுமையும் மகளீரும்'' எனும தலைப்பில் பெண்கள் தொழிலில் பங்குபற்ற வேண்டியதன் அவசியத்தையும், பெண்களின் வருமான அதிகரிப்பு இதனால் ஏற்படும் வாழ்க்கைத்தர அதிகரிப்புப் பற்றியும் விபரித்துள்ளார். அவ்வகையில் இரண்டாம் நிலைத்தரவையும் பயன்படுத்தியுள்ளார்.

ஜெயராமன் (1977), என்பவரால் எழுதப்பட்ட "Employment of women" எனும் நூலில், பெண்கள் தொழில் பங்கேற்பினால் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார தாக்கங்கள் குறித்தும் கடின வேலைகளில் இவர்களது பங்கேற்பு குறித்தும் விளக்கியுள்ளார். இதில் பெண்கள் தொழில் வாய்ப்பில் ஈடுபடும் போது அவர்களுக்கான வருமான மட்ட உயர்வு ஏற்பட்டாலும் அவர்கள் சமூக ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் குடும்பக்கட்டமைப்பு சீர்குலைவதாகவும் இவர்களது குழந்தைகளும் தாய், சகோதரர்களது உழைப்பைப் பார்த்து தமது கல்வியை இடைநிறுத்தி தொழிற் துறைகளில் ஈடுபடுவதற்கான நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகவும் விளக்கியுள்ளார்.

கந்தசாமி சரித்தா (2016), என்பவரால் எழுதப்பட்ட "பொருளாதார பங்கேற்பால் நலிவடையும் பெண்கள்" எனும் ஆய்வில் மாத்தளை களுதாவளை பிரதேசத்தில் வெளிநாட்டு பணிக்குச் சென்ற பெண்கள் ஆகியோர் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.இவ்வாய்வு வெளிப்பாட்டின் அடிப்படையில் பல்வேறு அழுத்தங்கள் பெண்கள் பொருளாதாரத்தில் பங்கேற்க காரணமாக இருப்பதுடன் பல விடயங்கள் பெண்களை நலிவு நிலைக்குட்படுத்துகின்றது என்ற விடயத்தில் இவ்வாய்வு கவனம் செலுத்துகின்றது.

சீனத்துல் முனவ்வறா, (இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்), என்பவரால் எழுதப்பட்ட "முஸ்லிம் பெண்கள் வேலைக்கு செல்வதனால் ஏற்பட்ட குடும்பவியல் தாக்கங்கள்: நிந்தவூர் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு" இவ்வாய்வானது பெண்கள் பொருளாதாரத்தின் பங்காளர்களாக மாறும் போது அவர்கள் எதிர்கொள்ளும் குடும்பவியல் தாக்கம் பற்றி ஆராய்வதைப் பிரதான நோக்கமாகவும், அரச, தனியார், வெளிநாடு போன்றவற்றில் அதிகமான பெண்கள் வேலைக்கு செல்வதும் அதற்கு தூண்டுதலான காரணிகளை அடையாளம் காண்பதையும் துணை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜெயகுமார் சுதேசினி, உதயகுமார் (இலங்கை யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோர்களினால் எழுதப்பட்ட "வட்டக்கச்சி கிராமத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் சமூக, பொருளாதார நிலை." இவ்வாய்வானது போரின் பின்னர் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் பொருளாதார நிலையை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புலவர்மணி ஆ.மூ.ஸர்புத்தீன் (2009) அவர்களால் எழுதப்பட்ட "மருதமுனையின் வரலாறு" எனும் ஆய்வு நூலில் மருதமுனையின் பூர்வீக வரலாறு, கல்வி (மார்க்கக்கல்வி) முறைமை, வாழ்வாதாரம், இலக்கியம், அரசியல், இலக்கியம் போன்ற பலவிடயங்கள் ஆராயப்பட்டுள்ளது.

அப்துல் சத்தார் (2015),"மான்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள்" எனும் ஆய்வு நூலில் மருதமுனையின் பூர்வீக வரலாறு, கல்வி (மார்க்கக்கல்வி) முறைமை, வாழ்வாதாரம், அரசியல், இலக்கியம், ஊடகத்துறை, த.ஃவா, போர்க்கால வாழ்வியல், சுனாமியின் பின்னரான மாற்றங்கள் போன்ற பலவிடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

## ஆய்வு முறையியல்


இவ்வாய்வானது சமூக விஞ்ஞான ஆய்வுகளுள் ஒன்றாகக் காணப்படுவதனால் பண்புசார் தரவுகளையும் பகுப்பாய்வுகளையும் கொண்டுள்ளது. இவ்வாய்வுக்கான பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கு ஆளு-நுஒஉநட முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வு முதலாம் நிலைத்தரவுகளையும், இரண்டாம் நிலைத்தரவுகளையும் அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவு மூலங்களாக நேர்காணல், வினாக்கொத்து போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.வினாக்கொத்தின மூலம் ஆய்வுப்பிரதேசத்தில் குடும்பவருமானத்தை மேம்படுத்துவதற்காக சிறுகைத் தொழிலில் ஈடுபடும் 100 பெண்களை 05 கிராமசேவகர் பிரிவினை அடிப்படையாக வைத்து சராசரியாக ஒரு பிரிவில் 20 பேர் என்ற அடிப்படையில் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு 25 வினாக்கள் கொண்ட வினாக் கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் சிறுகைத்தொழிலில் ஈடுபடும் பெண்களிடமும், அவர்களது தொழில்சார் முகவர்களுடனும், அவர்களது குடும்பங்களுடனும், அப்பெண்களின் கணவர்களுடனும், நேர்காணல் இடம்பெற்று தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாக இணையத்தள ஆக்கங்களும்,இவ்வாய்வுடன் தொடர்பான நூல்களும்,கல்முனை பிரதேச செயலக அறிக்கை ஆகியவற்றிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும் (Result and Discussion)

ஆய்வக்குட்படுத்தப்பட்ட சிறுகைத்தொழிற் துறையில் ஈடுபடும் பெண் முயற்சியாளர்களின் கல்வித் தகைமை, குடும்ப கட்டமைப்பு நிலை பின்வருமாறு அமைந்திருந்தது.

### 1.கல்வி நிலையும் குடும்ப கட்டமைப்பும்




**வரைபடம்: 01, கல்வி நிலையும் குடும்ப கட்டமைப்பும்**


இவ்வரைபடமானது ஆய்வுப்பிரதேசத்தில் சிறுகைத்தொழிலில் ஈடுபடும் பெண்களின் கல்வி நிலையையும் திருமண நிலையையும் விபரிக்கின்றது. இதற்கேற்ப கல்வி நிலையை நோக்கும் போது ஆரம்ப கல்வியைக் கற்ற பெண்களே(45) அதிகமாக இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். பட்டப்படிப்பை பெற்றவர்கள் (8) பேர் இதில் உள்ளடங்குகின்றனர். இதற்கு வேலையில்லாப் பிரச்சினையும், தகைமைக் கேற்ற அரசதொழில் கிடைக்காமையும் காரணமாகக் கூறப்பட்டது.

திருமண நிலையை நோக்கின் திருமணமான பெண்களே அதிகமாக இத்தொழில் முயற்சிகளில் அதிகம் (84) ஈடுபாடுகாட்டி வருகின்றனர். கணவன்மாரின் வருமானம் குடும்ப செவலினங்களுக்கு போதியதாக இல்லை என்பதும் சில குடும்ப தலைவர்கள் எவ்வித வேலைக்கும் செல்லாமல் இருப்பதுவும் இதற்கான காரணமாக கண்டறியப்பட்டது. விவாகரத்தானவர்களதும் விதவைகளினதும் எண்ணிக்கை குறைவாக இருப்பினும் அவர்கள் பிறரிரில் தங்கியிருக்க விரும்பாமையும் பிள்ளைகளின் கல்வி,பிற தேவைகளுக்காகவும் இத்தொழில் முயற்சிகளில் ஈடுபாடுகாட்டி வருகின்றனர் என்பதையும் ஆய்வின் மூலம் அறியக் கிடைத்தது.

இப்பிரதேச பெண்களின் பங்கேற்பு எவ்வகையான சிறு கைத்தொழில்களில் இடம்பெற்று வருகின்றது? என்ற ஆய்வுக் கேள்விக்கான தரவுகள் 2019ம் ஆண்டு கல்முனை பிரதேச சபை அறிக்கையில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் படி கிடைக்கப்பெற்ற முடிவுகள் பின்வருமாறு

**2 சிறு கைத்தொழில் பங்கேற்பு**

**வரைபடம்:02 மருதமுனைப் பிரதேசத்தில் பல்வேறு சிறு கைத்தொழிற் துறைகளில் பெண் முயற்சியாளர்களின் பங்கேற்பு**





**வரைபடம்:மூலம்: 02, சிறுகைத்தொழில் துறைகளில் பெண் முயற்சியாளர்களின் பங்கேற்பு**

மேற்கூறப்பட்ட அட்டவணை 2018ம் ஆண்டின்மருதமுனைப்பிரதேச முஸ்லிம் பெண்களின் சிறு கைத்தொழிற்துறை, பிறதொழில் பங்கேற்பு குறித்த விபரத்தை தருகின்றது. இவ்வரைபடமானதுநெசவு,சிறு வியாபாரம்,மணமகள் அலங்கரித்தல், உள்ளூர் உணவகம் வைத்திருத்தல்,மா, மிளகாய் இடித்தல், நூல் நூற்றல், சாரிக்கு குஞ்சம் கட்டுதல்,சாரம், லுங்கி தைத்தல், நெய்தல் என ஒன்பது வகையான சிறுகைத்தொழில் முயற்சிகளில் பெண் முயற்சியாளர்களின் பங்கேற்பினை விபரிக்கின்றது.அதன்படி மணமகள் அலங்காரம் ஆகக் குறைந்த அளவில் இடம்பெறும் அதே நேரம் நெசவுத் தொழிலிலேயே அதிகமான பெண்கள் (36%)ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு இப்பிரதேசத்தில் இத்தொழில் பிரசித்தமடைந்துள்ளமை ஒரு காரணமாக கூறப்பட்டது. அதற்கு அடுத்த படியாக நூல் நூற்றலிலும் (20%) தைத்தலிலும் (14%) பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.சாரிக்கு குஞ்சம் கட்டுவதில் (12%) மான பெண்களும், சாரன் லுங்கி தைப்பதில் (7%) மான பெண்களும் ஈடுபட்டுள்ளனர். மிளகாய், மா இடித்தல்,(1மூ) உள்ளூர் உணவகம் வைத்திருத்தல் (3%) போன்றவற்றில் பெண்களின் வகிபாகம் குறைவாகக் காணப்பட்ட போதும் இவற்றின் ஊடாக குடும்பத்தின் வருமான மேம்பாட்டிற்கு ஓரளவேனும் அவை பங்களிப்பு செய்கின்றன என்பது அறியப்பட்டது.

இவை தவிர பதிவு செய்யப்படாத நிலையில் சிறு கடைகளை வைத்திருத்தல், தையல், தும்புத்தடி,ஈர்க்குமாறு கட்டுதல், வைபவங்களுக்கான கேக் தயாரித்தல்,அலங்காரப் பொருட்கள் செய்தல் என பல வருமானமீட்டல் செயற்பாடுகளிலும் பெண்கள் பங்காற்றி வருகின்றனர்.

## 1. பொருளாதாரத் தேவையை நிவர்த்தி செய்வதில் பெண்களின் வகிபாகம்




**வரைபடம்:03, பொருளாதாரத் தேவையை நிவர்த்தி செய்வதில் பெண்களின் வகிபாகம்**

மேற்காட்டப்பட்ட அட்டவணையும் வரைபடமும் மருதமுனைப் பிரதேசத்தில் சிறுகைத்தொழிற் துறையூடாக் குடும்ப வருமானத்தை அதிகரித்து தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதில் பெண்களின் வகிபாகம் குறித்து விளக்குகின்றது. இதன்படி ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பெண்களினதும் சிறு கைத்தொழிற் துறையூடான வருமானத்தின் பெரும்பகுதி சீதனம் கொடுப்பதற்காக ஒதுக்கப்படுகின்றது. பிள்ளைகளின் கல்விக்காகவும் அன்றாடத் தேவைகளுக்காகவும் மொத்தமாக 30% வீதத்தை ஒதுக்குகின்றனர். வறுமை ஒழிப்பில் பெண்களின் வருமானத்தில் 14% மும், கடன் வழங்குவதற்காக 10% மும் பயன்படுத்தப்படுகின்றது. கணவன்மாரின் தொழில் முயற்சிகளுக்காக 6மூ வழங்கப்படுகின்றது. ஒப்பீட்டளவில் ஏனையவற்றை விட மேலதிக செலவுக்காக ஒதுக்கப்படும் தொகை குறைவாகும் (4%). இதற்கு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் மேலதிக தேவைகளில் இருந்து தவிர்ந்து கொள்வது காரணமாக கண்டறியப்பட்டது.

மைத்திரி கிருஷ்ணராஜ் ஜோய் டெஷ்முக்ஷ், (1993),“Gender in Economics” பெண்கள் வெளியில் சென்று உழைப்பதற்கான பொதுவான காரணங்களை குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் இவ்வாய்வானது வீட்டில் இருந்தவாறே குடும்ப பொறுப்பையும் தாண்டி சிறுகைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான காரணத்தை தெளிவுபடுத்துகின்றது.

குடும்பத்தை நிர்வகித்தல்,அரச சார்பான சார்பற்ற தொழில்களில் ஈடுபடுதல்,தமது கணவர்மாரின் தொழில்களில் உதவியாளர்களாக பணியாற்றுதல், சமூக சேவைகளில் ஈடுபடல்,குடும்ப உறவுகளை பேணுதல் என பல பொறுப்புக்களுக்கு மத்தியிலும் பெண்கள் சிறுகைத்தொழிற் துறை முயற்சிகளில் ஈடுபடுவதற்கான காரணங்களைக் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட நேர்காணலின் மூலம் வறுமை, பொருளாதார நெருக்கடி, அதிகரித்த வாழ்க்கைச் செலவு, பிள்ளைகளின் கல்விச் செலவு, நவீனத்துவத்தின் தாக்கம், பிறரில் தங்கி வாழவிரும்பாமை,மருதமுனைச் சூழல்,வேலையின்மை,சேமிப்புத்திட்டம், வற்புறுத்தல்,பராமரிப்போர் அற்றநிலை, சீதனக் கலாசாரம், ஆடம்பர செலவு, பொழுதுபோக்கு, நவீன தொழிநுட்ப பாவனைகள் வேலைகளை இலகு படுத்தியுள்ளமை, சமூக நிறுவனங்களின் சிறு கைத்தொழில் தாபமுயற்சிகளுக்கான ஊக்குவிப்புக்கள்போன்றன காரணங்களாக அவர்களால் கூறப்பட்டன.

முன்னைய ஆய்வுகள் பெண்களின் தொழிற் பங்கேற்பு, அதற்கான காரணங்கள், பெண்கள் தொழில் புரிவதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்த பொதுவான ஆய்வுகளாகவே முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வானது பெண்களின் சிறுகைத்தொழிற் பங்கேற்பில் ஈடுபடும் பெண்களின் குடும்ப கட்டமைப்பு, கல்வித்தகைமைகள்,குறித்து ஆராய்ந்துள்ளதோடு சிறு கைத்தொழில் எவ்வகையான தொழிற்களில் பங்கேற்றுள்ளார்கள் என்பன குறித்தும் அதன் மூலம் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதில் எவ்வாறு பங்காற்றுகின்றார்கள்

என்பது குறித்தும் குடும்ப பொறுப்பைத் தாண்டி இத்துறையில் அவர்கள் ஈடுபடுவதற்கான காரணங்கள் பற்றியும் ஆராய்ந்ததில் சிறப்பிடம் பெறுகின்றது. இத்துறை தொடர்பான ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் இவ்வய்வு பயனுள்ளதாக அமையும்.

**கண்டறிதல்கள்**

- 84 வீதமானோர் இத்தொழிலில் ஈடுபடக் கூடிய அளவு கல்வித் தகைமை பெற்றுள்ளனர்.
- சிறுகைத்தொழிலில் ஈடுபடும் பெண்களில் பெரும்பாலானவர்கள் (84%) திருமணமானவர்களாக உள்ளனர்.
- மருதமுனைப்பிரதேச முஸ்லிம் பெண்கள் அரச, அரச சார்பற்ற தொழிற்துறைகளோடு இணைந்ததாகவும் தனியாகவும்சிறு கைத்தொழிற்துறை முயற்சிகளில் ஈடுபாடுகாட்டிவருகின்றனர்.
- சிறு கைத்தொழில்களில் நெசவு உற்பத்தியிலும் அதனைச்சார்ந்த தொழில் முயற்சிகளும் கூடுதலான பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர்.இதற்கு இப்பிராந்தியத்தில் நெசவு உற்பத்தி கூடுதலான செல்வாக்குப் பெற்றிருப்பது கண்டறியப்பட்டது.
- பல்வேறு குடும்ப பொறுப்புக்களுக்கு மத்தியில் அவர்கள் இத்தொழிற்துறை முயற்சிகளில் ஈடுபடுவதற்கு ஏனைய தேவைகளை விட சீதனம் வழங்க வேண்டிய தேவையே பிரதான காரணமாக கண்டறியப்பட்டது. சிறுகைத்தொழிற்துறையூடான தமது வருமானத்தின் பெரும்பகுதியை இதற்காகவே அவர்கள் ஒதுக்குகின்றனர்.
- குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதில் ஆண்களின் துணையுடனும் தனியாகவும் பெண்கள் கணிசமான அளவு பங்காற்றி வருகின்றனர்.

**விதந்துரைகள்**

- வேறுதொழில் முயற்சிகளுக்கு மேலதிகமாக பெண்கள் சிறு கைத்தொழிற்துறை முயற்சிகளில் ஈடுபடுவது அவர்களின் குடும்ப பொறுப்புக்களை உதாசீனம் செய்யவும், உடல், உள ரீதியாக அவர்கள் பாதிப்படையவும் வாய்ப்புண்டு என்ற வகையில் ஒரு தொழிலோடு மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்வது சாலச்சிறந்தது.
- ஏனைய தொழில்களில் ஈடுபடாமலும் கணவன்மாரின் துணையின்றியும் இத்துறையில் ஈடுபாடுகாட்டும் பெண்களை சமூக நல நிறுவனங்கள் முன்வந்து அவர்களின் தொடர்ந்தேர்சையான முயற்சிகளுக்கு உதவியும் ஊக்கமும் வழங்க முன்வர வேண்டும்.
- இத்துறையில் பெண்களின் ஈடுபாடடிற்கு பல காரணங்கள் துணையாக இருந்த போதும் அடிப்படையான காரணங்களை இனங்கண்டு அவற்றுக்கு வருமானத்தை பயன்படுத்த பெண்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம்

தாம் பெறும் வருமானங்களை வீணான தேவைகளுக்காக உபயோகிப்பதில் இருந்து அவர்களை தடுக்கும்.

- பல்வேறு குடும்ப பொறுப்புக்களுக்கு மத்தியில் பெண்கள் ஆற்றும் இப்பணியை ஆய்வாளர்கள் வெளிக்கொணர்ந்து சமூகத்திற்கு பெண்களின் இப்பணி குறித்த புரிதலை ஏற்படுத்த வேண்டும்.

**முடிவுரை**

பொருளாதார மேம்பாட்டில் பெண்களின் வகிபாகம் குறித்து பல்வேறுதரப்பினராலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பேசப்பட்ட போதும் குடும்பத்தின்பொருளாதாரத் தேவையை நிவர்த்தி செய்து கொள்வதில் சிறுகைத்தொழிற்துறையூடான பெண்களின் வகிபாகம் குறித்து சமூகத்தினரால் பெருமளவு உணரப்பபடுவதில்லை. இதனையடிப்படையாகக் கொண்டு குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதில் சிறுகைத்தொழிற்துறையூடான மருதமுனைப்பிரதேச முஸ்லிம் பெண் முயற்சியாளர்களின் வகிபாகம் குறித்து முன்னெடுக்கப்பட்ட இவ்வாய்வில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் பெண்கள் பல்வேறு குடும்ப பொறுப்புக்களுக்கு மத்தியிலும் ஆண்களோடு இணைந்தும் தனியாகவும் பல்வேறு காரணங்கள் நிமித்தம் இத்துறையில் பங்காற்றி தமது குடும்பத்தின் அடிப்படை தேவைகளையும் மேலதிக தேவைகளையும் நிறைவு செய்து கொள்வதற்கு துணைசெய்து வருகின்றார்கள்.

**உசாத்துணைகள்**


Noordin Mohamed noor,(2001), Women's Family women's well bering selected paper 1st(ed) ilom press, research centre inlenator islam unit Malaysia.

சிறிசேன வீரசுந்தர,(1997),''*சிறுதொழில் முயற்சிளாளர்கள்*'' கொழும்பு: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்.

முஹம்மதுகான், ஆ.,(2008), ''*இஸ்லாமும் பொருளாதாரமும்*'', சென்னை: சாஜிதா புக் சென்டர்.

அமிர்தலிங்கம், கே, (2008),''*இலங்கையின் ொருளாதாரம்*'', கொழும்பு: பூபாலசிங்கம் வெளியீட்டகம்.

சத்தார், ஏ. ஆர்., (2015),''*மான்புறும் மருதமுனை வரலாற்றுப்பதிவுகள்*''மருதமுனை: சமூக மேம்பாட்டு மையம்.

இணையத்தள ஆக்கங்கள்

தவசி, (2016.05.05), ''*இலங்கையின் கைத்தொழில்கள;*'', *(*online) available:http//thavasilearningcity (accessed):2018.12.24.

அனுதினன் சுதந்திர நாதன், (2018.01.05), ''*இலங்கையின் பொருளாதார நிலை*'', (online) available:www.tamilmirror.lk (accessed:2109.01.12).

முஹம்மத் உஸைர், (1982), இஸ்லாமிய சிந்தனை: ''*பொருளாதாரத் துறையில் முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு*''*இ* பேருவலை,நளீமியா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.

**நேர்காணலுக்குட்படுத்தியோர்.**

1. ஜிபான், எம்.எஸ்.எல்., ஜமாஅத் அன்ஸாரில் முஹம்மதியா, மருதமனைப் பிரச்சார மையம்: மருதமுனை உறுப்பினர் (2019.03.15)
2. அகீலா, ஐ.ஐ. (மருதமுனை-06),(2019.03.12)
3. ஜாமினிஸா,எம்.ஏ. (மருதமுனை-05),(2019.03.21)
4. நிஹாரா, ஜே, (மருதமுனை-05), (2019.03.21)
5. நுஜைபா, எம்,ஜே.எப்.,(மருதமுனை-02),(2019.03.28)
6. ஹிஸாம், எம்,ஐ, (மருதமுனை-01),2019.03.28)
7. முபீன், எப்.எம்., (மருதமுனை-01),(2019.03.29)
8. ரஜாப்தீன்., ஐ.எம்.,(மருதமுனை-03),(2019.03.30)
9. பஸீல்,எச்., (மருதமுனை-02),(2019.04.03)
10. கலீலுல் ரஹ்மான்,வை.கே.,(மருதமுனை-04),(2019.04.03)